இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 09-11-2024

# பகுத்தறிவுத் தந்தை பெயரால் அறிவியல் மையம்!



தலைநகர் சென்னையில் பேரறிஞர் அண்ணா பெயரில் மாபெரும் நூலகம் அமைத்தார் தமிழினத் தலைவர் கலைஞர்! அத்தகைய பெருமைமிகு தலைவர் கலைஞர் பெயரால் மதுரையில் மாபெரும் நூலகம் அமைத்தார் திராவிட நாயகர் - மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

இதோ பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பெயரில் நூலகமும், அறிவியல் மையமும் தொழில் நகரமாம் கோவையில் அமைக்கப்படும் என்றும், அது 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் திறப்பு விழா காணும் என்றும் அறிவித்திருக்கிறார் திராவிட நாயகர் - மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

**தந்தை பெரியாரே அறிவுச் சுரங்கம். அவரது பெயரால் நூலகம் அமைவது பொருத்தமானது. எதையும் பகுத்தறிந்து பார்க்கச் சொன்னவர் அவர். 'நான் சொன்னதையும் நம்பாதே! பகுத்தறிந்து பார்' என்று சொன்ன அறிவுலக மேதை அவர் தான். 'நான் சொன்னதே சரி, அதை மட்டுமே நம்புங்கள்' என்று சொல்லி வந்த தத்துவவாதிகள் வரிசையில், 'நான் சொன்னதை அப்படியே நம்பாதே, உனது அறிவு ஏற்றுக் கொண்டால் மட்டுமே நம்பு' என்று சொன்னவர் தந்தை பெரியார் மட்டுமே. இதுதான் அறிவியல் சிந்தனை ஆகும்.**

அறிவியல் என்றால் இயற்பியல், வேதியியல் விஞ்ஞானிகள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். சென்னையில் பெரியார் பெயரில் ஒரு கோளரங்கம் அமைக்கப்பட்டபோது, 'பெரியாருக்கும் அறிவியலுக்கும் என்ன சம்பந்தம்?' என்று ஒரு தற்குறி கேட்டது. இப்போதும் கேட்டுக் கொண்டிருக்கிறது. கருவறையிலேயே அறிவை அடமானம் வைத்துவிட்டு வந்தவைகளுக்கு எதுவும் தெரியாது.

**"அறிதலே அறிவு. அறிவின் கூர்மையே பகுத்தறிவு" என்றார் தந்தை பெரியார். கட்டுப்பாடுகள் அற்ற சிந்தனைதான் பகுத்தறியத் தூண்டும். மதம் - சாதி - சுற்றுச்சூழல் - மனம் - குடும்பம் - நாடு - ஊர் - மக்கள் என்ற சார்பற்றுச் சிந்தித்தலைத் தான் அறிவியல் நிலை என்கிறோம். இப்படிச் சிந்தித்தவர் தந்தை பெரியார். சுயமரியாதை உணர்வின் மூலமாக சுயசிந்தனை மனிதனை உருவாக்க நினைத்தவர் அவர். 'தன்னை நம்பு' என்று சொல்லி தன்னம்பிக்கையை ஊட்டியவர் அவரே.**

**கட்டுப்பாடுகளைத் துறந்த அவரது சிந்தனைகள்தான் ஒவ்வொரு மேடைகளிலும் வெளிப்பட்டது. 1940களின் தொடக்கத்தில் இரண்டு மூன்று திருமண நிகழ்வுகளில் பெரியார் பேசிய பேச்சை பேரறிஞர் அண்ணா கேட்கிறார்கள். உலகப்புகழ் பெற்ற புத்தகங்களை எல்லாம் படித்த பேரறிஞருக்கு, 'கல்லூரி காணாத கிழவர்' பேசிய பேச்சு அதிர்ச்சியாக இருக்கிறது. அண்ணாவே நிருபராக மாறி, அந்த உரையைக் குறிப்பாக எடுக்கிறார். அதனை 'திராவிட நாடு' இதழில் தொடர் கட்டுரைகளாக எழுதுகிறார். 21.3.1943, 28.3.1943 ஆகிய நாளிட்ட இதழ்களில் அது வெளியானது. அதுதான் பெரியாரின் புகழ்பெற்ற நூலான 'இனி வரும் உலகம்' என்பது ஆகும்.**

"கம்பியில்லாத் தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்" என்று சொல்கிறார் பெரியார். இன்று செல்போன் இல்லாத 'சங்கி'யே இல்லை. "உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் இருக்கும்" என்கிறார். இன்று நடைமுறையில் அது இருக்கிறது. "பிள்ளைப் பேறுக்கு ஆண் பெண் சேர்க்கைகூட தேவைப்படாது" என்கிறார் அப்போது. 1940 ஆம் ஆண்டு அவர் சொன்னது, 1974 ஆம் ஆண்டு "டெஸ்ட் டியூப் பேபி" என உருவாக்கப்பட்டது. "குடும்பக் கட்டுப்பாடு சர்வசாதாரணம் ஆகும்" என்றார். ஆகிவிட்டது. "உணவு கேப்சூல்கள் வந்துவிடும்" என்றார். வந்துவிட்டது. "தண்ணீரை விலைகொடுத்து வாங்குவீர்கள்" என்றார். வாங்கிக் கொண்டு இருக்கிறோம். "பெண்கள், அனைத்து வேலைகளுக்கும் வந்துவிடுவார்கள்" என்றார். வந்துவிட்டார்கள். இவை அனைத்தும் 80 ஆண்டுகளுக்கு முன்னால் தந்தை பெரியார் சொன்னவை. இன்று நடப்பவை. **அதனால்தான் அவரை 'அறிவுலக ஆசான்' என்கிறோம். இது அறிவைப் பயன்படுத்த ஆர்வம் இல்லாதவர்க்குப் புரியாது.**

"யார் சொல்லியிருந்தாலும், எங்கு படித்திருந்தாலும், நானே சொன்னாலும் உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும்நம்பாதே. உன் சாஸ்திரத்தை விட, உன் முன்னோரை விட, உன் வெங்காயம் வெளக்கமாத்தை விட உன் அறிவு பெரிது. அதைச் சிந்தி!" என பெரியார் சொல்லியிருக்கிறார். பெரியாரின் கருத்துக்கள் அறிவியலோடு ஒத்துப்போகின்றன. குறிப்பாக இந்த வார்த்தை நிலவுப் பயணத்திற்கு ஒன்றிப் போகிறது.

"நிலவில் நீர் இல்லை என்று சாஸ்திரத்தில் எழுதப்பட்டு உள்ளது. ஆனால் எனக்குள் ஒரு கேள்வி எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. நிலவு நமக்கு மிகவும் பக்கத்தில்தான், வெறும் 3 லட்சம் கி.மீட்டரில்தான் இருக்கிறது. ஆக பூமியில் தண்ணீர் இருக்கும் போது நிலவில் மட்டும் எப்படி தண்ணீர் இல்லாமல் இருக்கும்? என்று கேள்வி எழுந்தது. இதற்கு வள்ளுவரும், பெரியாரும்தான் நான் இப்படி சிந்திக்கக் காரணம். மற்றவர்களைவிட வித்தியாசமாக யோசித்ததால்தான் நம்மால் நிலவில் நீர் இருப்பதை கண்டுபிடிக்க முடிந்தது" - இப்படிச் சொன்னவர், 'இஸ்ரோ' விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை. சிங்கப்பூரில் சொன்னார் அவர்.

அத்தகைய கூர்மையுள்ள அறிவாற்றல் உள்ள சமுதாயமாக தமிழ்ச் சமுதாயம் வளரவும் வாழவும் வேண்டும் என்று விரும்புகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். திராவிட இயக்கம் என்பது அறிவியக்கம் என்பதற்கு எடுத்துக்காட்டாக எழப் போகிறது கோவையில் அய்யா பெயரில் அறிவுக் கோட்டம்!

# திருமழிசையில் ரூ.71 லட்சம் மதிப்பில் புதிய திட்டப் பணிகள்!

## சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், நவ.9-

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமழிசை பேரூராட்சி, 15 வது வார்டு, குண்டுமேடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.15 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்ட பணிகள் துவக்கியும், 13-வது வார்டு பிரயாம்பத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.15 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டிடம் திறப்பு விழாவும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 5 லட்சம் மதிப்பில் புதிய நூலக கட்டிடம் திறப்பு விழாவும், ரூ.36 லட்சம் மதிப்பில் திருமழிசை, நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றன.

விழாவிற்கு பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், பேரூராட்சி தலைவர் ஜெ.மகாதேவன், பேரூராட்சி செயல் அலுவலர் ம.வெங்கடேஷ், பேரூராட்சி கவுன்சிலர்கள் சி.வேலு, ஜெயசுதா வேணுகோபால், ரவி ராஜேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாநில ஆதிதிராவிட நல குழு செயலாளர் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கி அங்கன்வாடி மையம் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்ட கட்டுமானப் பணியை தொடங்கி வைத்தோம், கட்டி முடிக்கப்பட்ட புதிய அங்கன்வாடி மையத்தையும், நூலக கட்டிடத்தையும் திறந்து வைத்தார்.

இதில் தி.மு.க. மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் வி.எம்.நாகதாஸ், துணை செயலாளர்கள் தி.கோ. செல்வம், வேந்தன், பொருளாளர் அருள், ஒன்றிய பிரதிநிதி சங்கர், வார்டு செயலாளர்கள் டி.கே. வேலு, தென்னரசு, வெங்கடேசன், இளைஞரணி அமைப்பாளர் கங்கா, ஒப்பந்ததாரர் சரவணன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் அங்கன்வாடி ஊழியர்கள், அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 8.11.2024 அன்று சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கே.எஸ். ரவிச்சந்திரன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட - அவர்களை

# தொழில் முனைவோராக உயர்த்தி வருகிறார் முதல்வர்!

## 'தினத்தந்தி' நாளேடு பாராட்டு!

**சென்னை, நவ. 9 -**

**"சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும் என்ற நோக்கில் அவர்களை தொழில் முனைவோராக உயர்த்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்" என்று 'தினத்தந்தி' நாளேடு பாராட்டியுள்ளது.**



தலையங்கம்

தினத்தந்தி

7.11.2024 (வியாழக்கிழமை)

இவர்கள் இனி தொழில் அதிபர்கள்!

சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும்' என்பதுதான் நல்லுள்ளம் படைத்த ஆன்றோரின் நோக்கம். ஆனால், அதுவரை சாதி வேறுபாடுகளால் ஒடுக்கப்பட்ட மக்களை கை தூக்கிவிட இடஒதுக்கீடு அவசியம் என்ற வகையில்,



இதுகுறித்து 7.11.2024 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:-

"சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும்" என்பதுதான் நல்லுள்ளம் படைத்த ஆன்றோரின் நோக்கம். ஆனால், அதுவரை சாதி வேறுபாடுகளால் ஒடுக்கப்பட்ட மக்களை கை தூக்கிவிட இடஒதுக்கீடு அவசியம் என்ற வகையில், அரசியல் சட்டத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அவர்களது உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும், அவர்களது மனித மாண்பை மீட்டெடுப் பதற்காகவும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் சமூக நீதிப் பாதையை காட்டினார்கள்.

இதில் கலைஞர் அவர்களின் பங்கு அளப்பரியது. 1971ல் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான இடஒதுக்கிட்டை 16 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தினார். அந்த 18 சதவீதம் முழுமையுமே ஆதி திராவிடர்களுக்கே கிடைக்கச் செய்யும் வகையில், மலைவாழ் மக்களுக்கு ஒரு சதவீதம் இடஒதுக்கீட்டை 1990-ல் வழங்கினார்.

இதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடரில் தாழ்ந்து கிடக்கும் அருந்ததியினருக்கு 3 சதவீதம் உள் இடஒதுக்கீடும் வழங்கி ஆதிதிராவிடர் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுத்த ஒரு புரட்சியாளராக கலைஞர் அவர்கள் விளங்கினார்.

அவர் காட்டிய சமூக நீதிப் பாதையில் பீடுநடை போட்டுவரும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சி சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் இருக்க வேண்டும்,

அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டும் என்ற வகையில் பல நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

அந்த முயற்சியில், ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் வேலை தேடுபவர்களாக மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு வேலை வழங்குபவர்களாக, அதாவது தொழில்முனைவோராக உயரவேண்டும் என்ற நோக்கில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்தத் திட்டப்படி, இந்தச் சமுதாய மக்கள் உற்பத்தி, வணிகம் மற்றும் சேவை சார்ந்த புதிய தொழில்களைத் தொடங்கினாலோ, ஏற்கனவே தொடங்கியுள்ள தொழில்களை விரிவாக்கம் செய்தாலோ, திட்ட முதலீட்டில் 35 சதவீதம் முதலீட்டு மானியமாக அரசு வழங்கும். மீதமுள்ள 6.5 சதவீதத் தொகையில், அதிகபட்சமாக ரூ.14. கோடி வரை வங்கிக் கடனாக வழங்கப்பட்டு, 6.5 சதவித வங்கிக் கடனுக்கான வட்டி விகிதத்தில், 6 சதவீத வட்டியையும் அரசே ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டு செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் இதுவரை 1,313 ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்த புதிய தொழில் முனைவோரும், ஏற்கனவே தொழில் முனைவோராக இருப்பவர்களும் புதிய தொழில்களைத் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் என்று ரூ.121.61 கோடியை முதலீட்டு மானியமாகப் பெற்றிருக்கிறார்கள்.

இதில் 288 பேர் பெண்கள் என்பது மிகவும் பெருமைக்குரியது. இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு கல்வித் தகுதி எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். வயதுவரம்பு மட்டும் 35 வயது என்று கூறப்பட்டுள்ளது.

ஆக. ஆதிதிராவிடர், பழங்குடியினத்தை சேர்ந்த யாரும். அது படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காதவர்களாக இருந்தாலும் சரி, புதிய தொழில்களை அரசு வழங்கும் மானியத்துடன் தொடங்க முடியும்.

அரசின் இந்த முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. இதுபோல, அனைத்து இளைஞர்களும் வேலை தேடுபவர்களாக மட்டுமல்லாமல், தொழில் தொடங்கி மற்றவர்களுக்கும் வேலை கொடுப்பவர்களாக உயரும் வகையில் வாய்ப்புகளை வழங்க, இதுபோன்ற சலுகைகளை வழங்கினால் வேலையில்லாத் திண்டாட்டமும் மறையும், தமிழ்நாட்டில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்பார்க்கும் தொழில் வளர்ச்சியையும் வேகமாக அடையமுடியும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்'

# திராவிட மாடல் அரசின் புரட்சித் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, நவ.9–**

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் தொடர்பாக 'தினத்தந்தி' நாளிதழில் வெளியான தலையங்கத்தை மேற்கோள்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

"அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் – ஆதிதிராவிடர் – பழங்குடியின மக்களில் இருந்து தொழில்முனைவோர்களை உருவாக்கிடும் திராவிட மாடல்–இன் புரட்சித் திட்டம்!

**இதுவரையில்,**

**பயனாளிகள் – 1988**

**கடன் – ரூ.453 கோடி**

**மா னியம் – ரூ.230 கோடி**

தினத்தந்தியின் இந்தத் தலையங்கம் நமது பணிகளுக்கான ஊக்கம் என்றாலும்; இதன் நோக்கம் தேவையுள்ள மக்களுக்கு முழுதாகச் சென்றடைய, விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் அனைவரும் இதனைப் பயன்படுத்திக்கொண்டு உயர வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



தலையங்கம்

தினத்தந்தி

இவர்கள் இனி தொழில் அதிபர்கள்!